தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வியாழக்கிழமை, 1979 மார்ச் 22.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. அறிவிப்புகள்.

(அ) திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் குணமடைந்திட நல்லெண்ணத்தைத் தெரிவித்துக் கொள்ளல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் பம்பாயில் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகிறார். அவரது உடல்நிலை கவலைக்கிடமாக இருப்பதை அறிந்து இந்த அவை தனது கவலையைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவர் விரைவில் குணமாகி உடல் நிலை சீரடைந்து நாட்டிற்கு நலன் பயக்க வேண்டுமென்று இப்பேரவை சார்பாகவும் நமது நல்லெண்ணத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

திண்டுக்கல் மாவட்ட மருத்துவ அதிகாரி.

குறுகிய கால வினா எண். 21— திரு. என். பழனிவேல்: திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் மாவட்ட மருத்துவ அதிகாரி அப்சல்கான் மீது நடந்த சம்பவம் சம்பந்தமாக விசாரணை எந்த இடத்தில் தொடரும்?

(ஆ) யார், யார் விசாரிக்கப்படுவர்?

(இ) பொது மக்களும் அந்த விசாரணையில் சாட்சியம் அளிக்க வசதி செய்யப்பட்டுள்ளதா?